بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/08/2026 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## நன்றி செலுத்துதல் தொடர்பாக சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் தூய செயல் முன்மாதிரி

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்க வைப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் கண்கூடானவை. தமது இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக எந்த வகையிலாவது தொண்டாற்றிய தம்முடைய உதவியாளர்களுக்கும் ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் நன்றி செலுத்துபவராக இருந்தார்கள்.

இதன்படி, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் 1899 அக்டோபர் 4 வெளியிட்ட பிரசுரத்தில் கூறினார்கள்: அல்லாஹ்வின் அன்பர்களின் ஒவ்வொரு குழுவிற்கும் அதன் தொடக்க நிலையில் சந்தாக்கள் தேவைப்படுவது இறைவனின் வழிமுறையாகும். நம்முடைய நபி (ஸல்) அவர்களும் பலமுறை சஹாபாவுக்கு சந்தாக்களை விதித்தார்கள்; அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைவரையும் விட முன்னணியில் நின்றார்கள். எனவே, வீரம் நிறைந்த துணிச்சலுடன் உதவி செய்வதற்குத் தயக்கமின்றி அடியெடுத்து வைக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களின் வசதிக்கேற்ப இந்த லங்கர் கானாவுக்காக பொருளுதவி செய்ய வேண்டும். சாத்தியமெனில், நாம் இந்த லங்கர் கானாவைப் பற்றிய கவலையிலிருந்து விடுபட்டு, நம்முடைய பணியில் மனஅமைதியோடு ஈடுபடும் வகையில் ஓர் ஏற்பாடு அமைய வேண்டும் என்றும், நம்முடைய நேரத்திலும் எவ்விதத் தடங்கலும் ஏற்படாமலிருக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். நமக்கு உதவி செய்பவர்கள் இறுதியில் அல்லாஹ்வின் உதவியைக் காண்பார்கள்.

இதை என்னால் எழுதாமல் இருக்க முடியாது: இந்த உதவியிலும் தியாகத்திலும் முதல் இடத்தில் நம்முடைய தூய்மையான கலப்பற்றவர் இறைவழியில் என் அன்புத் தோழர் மவ்லவி ஹகீம் நூருத்தீன் சாஹிப் இருக்கிறார்; இவர் நிதி உதவி செய்தது மட்டுமன்றி, உலகத் தொடர்புகள் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, எளிமையைத் தழுவி, தம் சொந்த ஊரிலிருந்து ஹிஜ்ரத் செய்து, இறக்கும் நாள் வரைக்குமாக காதியானில் வந்து அமர்ந்து கொண்டார்; எந்நேரமும் ஆயத்தமாக இருக்கிறார். நான் விரும்பினால் அவரைக் கிழக்கிலோ அல்லது மேற்கிலோ அனுப்பி வைக்கலாம்.

என் பார்வையில் இவர்கள், பராஹீனே அஹ்மதிய்யாவில் أَصْحَابُ الصُّفَّةِ وَمَا أَدْرَاكَ مَا أَصْحَابُ الصُّفَّةِ (அதாவது, அவர்கள் திண்ணைத்தோழர்கள்; திண்ணைத்தோழர்கள் யார் என்று உமக்கு அறிவித்தது எது?) என்று இல்ஹாம் அருளப்பெற்றவர்களாவர்.

புகழத்தக்க அவருக்கு அடுத்து, இரண்டாம் இடத்தில் இறைவழியில் என் அன்புத் தோழர் மவ்லவி அப்துல்கரீம் சாஹிப் சியால்கோட்டி ஆவார். அவருக்கோ ஏற்கனவே இறைவன் உலகப் பதவிகள் மீதோ அல்லது உலகப் புகழின் மீதோ ஈடுபாட்டை அளிக்கவில்லை; ஆனால் இப்போது அவர் முற்றிலும் உலகியல் எண்ணங்களை விட்டும் விலகி இந்த வாசலில் வீற்றிருக்கிறார்; மேலும், இரவு பகலாகத் தம் மூளைக்குத் அதன் திறனுக்கு மீறிய வேலையைக் கொடுத்து மார்க்கத் தொண்டாற்றி வருகிறார். ஜுமுஆ தொழுகையில் திருக்குர்ஆனின் பல உண்மைகளையும் நுட்பங்களையும் விளக்கி முஸ்லிம்களுக்குப் பயனளித்து வருகிறார். மவ்லவி ஹகீம் நூருத்தீன் சாஹிப் அவர்களின் நகரத்தைச் சேர்ந்தவரான ஹகீம் ஃபஸ்ல் தீன் சாஹிப் இருக்கிறார், அவரும் ஏறத்தாழ அதே இடத்தில் வசித்துக்கொண்டு தொண்டுகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் டாக்டர் பூடே கான் சாஹிப், டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் லாஹோரீ, டாக்டர் மிர்ஸா யஃகூப் பேக் சாஹிப் கலானூரீ, டாக்டர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப், டாக்டர் அப்துல்ஹகீம் கான் சாஹிப், சாஹிப்ஸாதா ஸிராஜுல் ஹக் சாஹிப் மற்றும் சேட் அப்துர் ரஹ்மான் சாஹிப் மதராஸீ ஆகியோரைப் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

மேலும் கூறினார்கள்: சேட் சாஹிப் எவ்விதத் தடையுமின்றி மாதம் நூறு ரூபாய் அனுப்பி வருகிறார்; (அதுபோக, கூடுதலாக) பலமுறை ஐந்நூறு ரூபாய் வரை அனுப்பி வந்துள்ளார். அவ்வாறே, இறைவழியில் தம் அன்புத் தோழர் வாணிபர் ஷேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் லாஹோரீயைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அவர் வழக்குகளுக்காகப் பெருந்தொகையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் நவாப் முஹம்மத் அலீ கான் சாஹிப் அவர்களைப் பற்றியும் கூறினார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள், மிகச் சிறிய தொண்டு செய்பவர்களுக்கும் நன்றி தெரிவிப்பார்கள். காஜா கமாலுத்தீன் சாஹிபின் பகுதியில் ஒருவர் ஃபாலூடா விற்று வந்தார். அவர் ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஃபாலூடா வழங்க விரும்புவதாகத் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினார். இதன்படி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் காஜா சாஹிப் வீட்டுக்கு வருகை தந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்களின் அனுமதியுடன் அவரை வரவழைத்தார். அவர் ஃபாலூடா தயார் செய்து ஹுஸூர் அவர்களுக்கு வழங்கினார். ஹுஸூர் அவர்கள், "மிக நன்றாக இருக்கிறது" என்று கூறினார்கள். பின்னர் அவர் தோழர்களுக்காகப் பத்து பன்னிரண்டு கிண்ணங்களை அனுப்பினார். ஹுஸூர் (அலை) அவர்கள் அவருக்கு இரண்டு ரூபாய் அனுப்பினார்கள். ஆனால், அவர் வாங்க மறுத்து, ‘எனக்குப் பணம் எதுவும் வேண்டாம்; என்னை ஹுஸூர் (அலை) அவர்களிடம் அழைத்துச் செல்லுங்கள்’

என்று கூறினார். இதன்படி அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டார். அன்னார் அவருக்காக துஆவும் செய்து, ஜஸாகுமுல்லாஹ் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்ராஹீம் பகாபூரீ சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை சியால்கோட் ஜமாஅத்தைச் சேர்ந்த நாங்கள் சிலர் சிறிது ரூபாய்களை அன்பளிப்பாக வழங்கினோம். ஹுஸூர் (அலை) அவர்கள், முதலில் 'அல்ஹம்துலில்லாஹ்' என்றும் பின்னர் 'ஜஸாகுமுல்லாஹ்' என்றும் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்தி, பின்னர் எங்களுக்காக துஆ செய்தார்கள் என்பதால் எங்களுடைய ஈமானில் ஒருவித உறுதி ஏற்பட்டது.

ஒரு நிகழ்வை ஸுல்ஃபிகார் அலீ கான் கோஹர் சாஹிப் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஹுஸூர் அவர்கள் பைத்துத்துஆவின் கீழே இருக்கின்ற அறையிலிருந்து வெளியே வருகை தந்தார்கள். நான் அதற்கு முன்னால் இருந்த அறையில் தங்கியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் முடிகளில் மருதாணி பூசியிருந்தார்கள். அன்னார் என்னிடம், “மவ்லவி சய்யித் சர்வர் ஷாஹ் சாஹிபிடம் கூறி எமக்காகச் சிறிது உணவை இங்கு எடுத்துவரச் சொல்லுங்கள்” என்று கூறினார்கள். நான் செய்தியைத் தெரிவித்துவிட்டுப் பார்த்தால், உணவு முற்றிலும் தீர்ந்துபோயிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக உணவு எதுவும் மீதமிருக்கவில்லையே என்று மவ்லவி சாஹிபின் முகம் வெளிறிப்போனது. எவ்வாறாயினும், அவர் ஒரு சிறிய கிண்ணத்தில் பாலையும், மூன்று சுட்ட Bread-களையும், சர்க்கரையையும் எடுத்துவந்தார். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன்னால் வந்து, ‘வேறு எதுவும் இல்லை’ என்று பணிவுடன் கூறினார். ஹுஸூர் அவர்கள் முகத்தில் வெளிப்பட்ட மிகுந்த நன்றியுணர்வுடன் உணவை எடுத்து, இரண்டு டோஸ்ட் Bread-களை எடுத்துச் சர்க்கரையில் தொட்டு உண்டுவிட்டு, தண்ணீர் அருந்திக்கொண்டார்கள்.

1900-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹுஸூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் முஹம்மத் அலீ சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், “தாங்கள் மிகவும் உன்னதமான உடைகளை அன்பளிப்பாக அனுப்பியுள்ளீர்கள்” என்று நன்றி தெரிவித்தார்கள். ஆடைக்குப் பதிலாக ஹுஸூர் (அலை) அவர்கள் அவருக்காக, “அல்லாஹ் இதற்குப் பதிலாக தனது எண்ணற்ற, அறியப்படாத கருணை மற்றும் அருளைப் பொழிவானாக. இறையச்ச ஆடையைக் கொண்டு முழுமையாக, இறைநேசர்கள் மற்றும் நல்லடியார்களின் வடிவில் கண்ணியமளிப்பானாக” என்று துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதத்தில் இவ்வாறு கூறினார்கள்: தங்களிடமிருந்து 50 ரூபாய் தொகை கஷ்டமான நேரத்தில் கிடைத்தது. பொறாமை குணமுடைய தீயவர்கள் நீதிமன்றத்தில் என் மீது வழக்குத் தொடுத்துள்ள இத்தகைய நெருக்கடியான, அவசியமான நேரத்தில் தாங்கள் தொடர்ச்சியாகப் பொருளுதவி செய்வது நன்றிக்குரியது.

ஒரு சஹாபி கூறுகிறார்கள்: நான் அஹ்மதிய்யத்தை ஏற்றேன். வீட்டு மக்களிடம் அதை மறைத்து வைத்தேன். சில காலத்துக்குப் பிறகு, இரகசியம்

வெளியானது. தந்தையார், ‘நீ அஹ்மதியாகிவிட்டாய்’ என்று தீர்க்கமாகப் பதிலளித்து வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டார். நான் ஒரு கடையைத் திறந்து கொண்டேன். தையல் வேலை செய்து வந்தேன். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்காக ஓர் ஆடையை ஆயத்தம் செய்ய வேண்டும் என்ற பேரார்வம் என் உள்ளத்தில் இருந்தது. இதன்படி, ஒரு மேலாடையும், பைஜாமாவும் தைத்தேன். ஒரு கோட்டும் தயார் செய்தேன். காதியான் செல்வதற்கான வழிச்செலவிற்குப் பணத்தைப் புரட்டி காதியான் சென்று சேர்ந்தேன்.

அது ஒரு வெள்ளிக்கிழமையாகும். இன்றே இந்த அன்பளிப்பை ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்; இவ்வாறு ஹுஸூர் (அலை) அவர்கள் ஜுமுஆவுக்கு அணிந்து வரக்கூடும் என்று விரும்பினேன். நான் காஸீ ஸியாவுத்தீன் சாஹிபைக் கடையில் சந்தித்து, அவரிடம் கூறியபோது, அவர் என்னை ஹுஸூர் (அலை) அவர்களிடம் அழைத்துச் சென்றார். ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு மரக்கட்டிலில் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்கள்; அருகிலேயே காஜா கமாலுத்தீன் சாஹிப் பாயில் அமர்ந்திருந்தார். நாங்களும் அமர்ந்துகொண்டோம். காஜா சாஹிப் எங்களிடம், ‘நீங்கள் வந்த நோக்கத்தை நான் சொல்லட்டுமா?’ என்று கேட்டார்.

பிறகு, காஜா சாஹிப் அந்த உடைகளை ஹுஸூர் (அலை) அவர்களிடம் சமர்ப்பித்து, ‘ஹுஸூர் அவர்கள் இந்த ஆடையை அணிந்துகொண்டு ஜுமுஆ தொழுகை தொழ வேண்டும் என்று இந்த இளைஞன் விரும்புகிறான்’ என்று கேட்டுக் கொண்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அப்பொழுதே (உள்ளே சென்று) அந்த உடையை அணிந்தார்கள். கோட் கொஞ்சம் மிகவும் இறுக்கமாக இருந்தது. நான் அதைச் சற்று பிரித்து சரி செய்வதற்காக சந்தைக்குக் கொண்டுவந்தேன். திருப்பி கொண்டு வந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் மீண்டும் அணிந்தார்கள்; ஆனால், இப்பொழுதும் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அது இறுக்கமாகவே இருந்தது; பொத்தான்களை மூட முடியாமல் இருந்தது. இருப்பினும், என் சந்தோஷத்திற்காக, இழுத்துப் பிடித்துப் பொத்தான்களைப் போட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அஹ்மதி சமுதாயத்திற்காக எழுதிய ஒரு கடிதத்தில் கூறுகிறார்கள்: “எல்லாவற்றிற்கும் மேலாக, என் உள்ளத்தில் அல்லாஹ்விற்கான நன்றியுணர்வே கொந்தளித்து மேலெழுகிறது; அவன் என் ஜமாஅத்திற்கு உண்மையான உறுதியையும் அன்பையும் அனுதாபத்தையும் வழங்கியுள்ளான். இறைவனின் அருள் அவர்களோடு இல்லாதிருந்தால், தங்களின் நிதி நெருக்கடியும், வருமானக் குறைவும் இருந்தும், சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய அடிச்சுவட்டில் இந்த அளவிற்குக் கீழ்ப்படிந்து, தம் ஆற்றலுக்கும் மீறி நிதித் தொண்டில் ஈடுபடும் இந்தத் தவ்ஃபீக் அவர்களுக்கு ஒருபோதும் வழங்கப்பட்டிருக்காது. அவர்கள் அனைவரின் செல்வங்களிலும் இறைவன் பரக்கத் செய்வானாக என்றும், மார்க்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அவர்கள் செய்துவரும் இந்த உதவியையும் ஒத்துழைப்பையும் இறைவன் இரு உலகங்களிலும் அவர்களின் நன்மைக்குக் காரணமாக ஆக்குவானாக என்றும் நான் துஆ செய்கிறேன்.”

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: “அல்லாஹ் எவர் மீது அருள் புரிந்துள்ளானோ, அதற்கு நன்றி செலுத்துவது என்பது அவனுடைய படைப்புகளுக்கு நன்மையும் நன்னடத்தையும் புரிவதுமே ஆகும்; மேலும் இறைவன் தந்த இந்த அருளின் மீது இறுமாப்பு கொள்ளாமலும், காட்டுமிரண்டிகளைப் போல ஏழைகளை நசுக்காமலும் இருப்பதாகும்.” அதாவது மக்களுக்கு உதவுவதன் பக்கம் கவனமூட்டினார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மக்களின் விவகாரங்களைப் பற்றியும் முன்னரே அறிவித்துவிடுவான். சில சமயம் அல்லாஹ்வின் ஹிக்மத்தின் அடிப்படையில் அவை நிறைவேறுவதற்கு நேரமெடுக்கும். இத்தகைய சூழல்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் துஆக்களில் ஈடுபட்டுவிடுவார்கள். அந்த விஷயம் நிறைவேறியதும், ஹுஸூர் (அலை) அவர்கள் மிகுந்த நன்றியுணர்வுடன் அல்லாஹ்வுக்கு முன் சஜ்தாவில் விழுந்துவிடுவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஒரு நிகழ்வைக் கூறுகிறார்கள்: ஒருமுறை ஷரம்பத் என்பவரின் சகோதரர் பிஷம்பர் தாஸ் என்பவர் தொடர்பாக அவர் குற்றவியல் வழக்கிலிருந்து (குற்றமற்றவர் என) முழுமையாக விடுவிக்கப்பட மாட்டார், ஆனால் அவருடைய சிறைத்தண்டனையில் பாதி தண்டனை மட்டுமே எஞ்சியிருக்கும் என்று முன்னறிவிப்பு செய்திருந்தேன். தற்செயலாக, தீர்ப்பு கூறப்பட்டபோது, எதிர்பாராதவிதமாக அவருடைய வாரிசுகள் ‘பிஷம்பர் தாஸ் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுபட்டு விட்டார்’ என்று பரப்பிவிட்டார்கள்.

நான் பெரிய பள்ளிவாசலில் தொழச் சென்றிருந்தேன். அப்பொழுது ஒருவர், ‘பிஷம்பர் தாஸ் (வழக்கிலிருந்து) விடுவிக்கப்பட்டார், கடைவீதியில் அவருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன’ என்று எனக்குத் தகவல் கூறினார். இப்பொழுது, ‘மிர்ஸா சாஹிப் அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறவில்லை’ என்று இந்துக்கள் தாக்குதல் நடத்துவார்களே என்று பெரும் வேதனை அடைந்தேன். இந்தத் துயரத்தினால் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்தும் எனக்கு ஓர் ஆண்டிற்குச் சமமாகத் தோன்றியது. தொழுகையில் ஒரு ரக்அத்திற்குப் பிறகு நான் சஜ்தாவிற்குச் சென்றபோது, அந்த நேரத்தில் எனது தவிப்பு மிகவும் உச்சத்தை அடைந்தது... அப்பொழுது لَا تَخَفْ إِنَّكَ أَنْتَ الْاَعْلَىٰ {அதாவது, அச்சமடையாதீர். நிச்சயமாக நீர்தான் மேலோங்கியிருக்கிறீர்.} என்று இறையறிவிப்பு வந்தது.

பிறகு, முன்னறிவிப்பு எப்படி நிறைவேறும் என்று நான் காத்துக்கொண்டிருந்தேன். ஆனால், எந்த அடையாளமும் வெளிப்படவில்லை. நான் மீண்டும் மீண்டும் ஷரம்பத்திடம் கேட்டுக்கொண்டேயிருந்தேன். ஆனால், அவர், ‘பிஷம்பர்தாஸ் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுவிக்கப்பட்டு விட்டார்’ என்றே கூறிக்கொண்டிருந்தார். இப்படியே ஏறக்குறைய ஆறு மாதங்களோ அல்லது சற்று கூடக் குறையவோ ஆகியிருந்தன. தீய எண்ணம் கொண்ட மக்கள், ஏளனமும் பரிகாசமும் செய்து கொண்டிருந்தனர். ஆனால், ஷரம்பத் ஒருபோதும் ஏளனம் செய்யவில்லை. ஒருநாள் தற்செயலாக, காலையில் பட்டாலாவிலிருந்து ஒரு தஹ்சீல்தார் (வட்டாட்சியர்) காதியானுக்கு வந்தார். அவர் குதிரையிலிருந்து

இறங்குவதற்கு முன்பே, இந்துக்கள் அவருக்கு முகமன் கூற வந்தனர். அவர் பிஷம்பர் தாஸைப் பார்த்து, 'நீங்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்றதனால் நாம் மகிழ்ச்சியடைந்தோம், ஆனால் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது' என்று கூறினார்.

இந்த விஷயத்தைக் கேட்டவுடனேயே நான் நன்றி சஜ்தா செய்தேன். ஷரம்பத்திடம், "நீ ஏன் இவ்வளவு காலம் பொய் சொல்லி என்னை வேதனைப்படுத்தினாய்?" என்று கேட்டேன். அதற்கு அவர், 'ஒரு நிர்பந்தத்தில் நான் பொய் சொல்ல வேண்டியதாயிற்று; இல்லையென்றால், எங்களுடைய சமுதாயத்தில் திருமண உறவுகளின் போது இதுபோன்ற விஷயங்களில்கூட மிகவும் குறைகாண்பார்கள்; ஏதேனும் துன்னடத்தை நிரூபணமானால் வரன் கிடைப்பது சிரமமாகிவிடும்' என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "என்னுடைய அடையாளங்கள் வெளிப்படாத எந்தவொரு சமுதாயமும் இல்லை; என்னுடைய அடையாளங்களுக்குச் சான்றாக இல்லாத எந்தவொரு பிரிவினரும் இல்லை. இந்த அடையாளங்களின் சான்றாளர்கள் பத்து கோடி பேர் என்று கூறினாலும் அது மிகையாகாது. ஆனால், எதிரிகளின் நிலையைக் கண்டு அழுகையே வருகிறது; ஏனெனில், அவர்கள் எவ்விதப் பயனையும் அடையவில்லை.

இவர்களுக்குக் காட்டப்பட்ட இந்த அடையாளங்கள் ஹஸ்ரத் ஈஸப்னு மர்யமின் காலத்தில் யூதர்களுக்குக் காட்டப்பட்டிருந்தால், அவர்கள் ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ அதாவது, 'அவர்கள் மீது இழிவும் வறுமையும் விதிக்கப்பட்டன' என்ற வசனத்திற்குரிய இலக்காக ஆகியிருக்க மாட்டார்கள். மேலும் லூத் நபியின் சமுதாயத்தினர் இந்த அடையாளங்களைக் கண்டிருந்தால், பேரதிர்ச்சியூட்டும் நிலநடுக்கத்தினால் பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால், அந்த உள்ளங்களைக் குறித்து வருத்தமே ஏற்படுகிறது; ஏனெனில், அவை கல்லைவிடவும் கடினமானவை என்று நிரூபணமாகியது. மேலும், ஒவ்வொரு இருளையும் விட அவர்களின் உள்ளத்தின் இருள் அதிகரித்துவிட்டது.

அல்லாஹ் நமக்கு நன்றியுணர்வின் உண்மையான புரிதலை ஏற்படுத்துவதுடன், மாநபி (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் பைஅத்தில் இணைந்து மெய்யான ஒளியையும் பார்வையையும் இறைஞானத்தையும் தந்தருள்வானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّـاٰتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**